# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2021ம் ஆண்டு 30 செப்டம்பர் மாதம் ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

பொருள்–1

இந்நகராட்சிக்கு சொந்தமான பழவேலி எரிவாயு தகன மேடை புணரமைக்கப்பட்டு LPG கேஸ் பயன்படுத்தும் விதமாக மாற்றியமைக்கப்பட்டு இம்மயானத்தை பராமரிக்க தேவையான ஆட்கள் மற்றும் LPG சிலிண்டர்கள் சப்ளை செய்யவும் ஓர் ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு இந்நகர் மன்ற தனி அலுவலரின் 09.07.2020 நாளிட்ட ஒப்புதலின் பேரில் இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.697/2020/இ1, நாள்.09.07.2020–ன் படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிக்கு இந்நகராட்சி ஆணையாளரின் செயல்முறைகள் ந.க.எண்.697/2020/இ1, நாள்.24.07.2020–ன் படி 01.08.2020 முதல் ஓர் ஆண்டிற்க்கு பராமரிக்க M/S.MHT நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட உத்தேச செலவினத் தொகை ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மாதம் ஒன்றிக்கு 15 (சடலங்கள்) என்ற அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது. ஆகஸ்ட் 2020 முதல் ஜனவரி 2021 வரையிலான ஆறு மாதங்களுக்கு ஒப்பந்ததாரர் ரூ.3,50,800/– தொகை வழங்கப்பட்டது. மீதம் உள்ள ஆறு மாதங்களுக்கு ரூ.3,49,200/– மட்டுமே மீதம் உள்ளது.

இந்நிலையில் கொரோனா (கோவிட் 19)–ன் இரண்டாம் அலை மிகத் தீவிரமாக பாதித்தன்பேரில் செங்கல்பட்டு நகராட்சி மாவட்ட தலைமையிடமாக அமைந்ததனால் மே 2021–ம் மாதம் மட்டும் சுமார் 275 சடலங்களும் ஜீன் 2021–ம் சேர்த்து சுமார் 400 சடலங்கள் எரிக்கப்பட்டுள்ளது. இதற்க்காக தேவையான பணியாளர்கள் இரண்டு Shift பணியாளர்களும், கூடுதலாக எரிவாயு சிலிண்டர்களும் பயன்படுத்தப்பட்டதாகவும் இதற்க்கான ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகையுடன் கூடுதல் செலவானதாக ஒப்பந்ததாரர் கூடுதல் செலவினம் வழங்க கோரியுள்ளார்.

மே–2021 மற்றும் ஜீன்–2021 மாதம் வரை சுமார் 400 சடலங்கள் எரித்த வகையில் நகராட்சிக்கு செலுத்திய கட்டணம் ரூ.8.00 இலட்சம் ஆகும். மயானத்தில் பராமரிக்கப்பட்ட பதிவேடு மற்றும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரசீதுகள் பார்த்த வகையில் கூடுதல் சடலங்கள் எரித்த வகையில் கூடுதலாக ரூ.5.50 இலட்சம் செலவகியுள்ளதாக தெரிய வருகிறது.

ஏனவே இத்தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.7.00 இலட்சத்திற்கு கூடுதலாக ரூ.5.50 இலட்சம் ஒதுக்கீடு செய்ய மன்ற ஒப்புதலுக்கு.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1294, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் கீழ் கண்டுள்ள பிரிவுகளிலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு 2020–2021–ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்க வேண்டி உள்ளது. செலவினத்திற்கு ஆகும் தோராய மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | GFEJEY Agencies | EISHAL Agencies |
| 1 | 1 புடவை | 735 | 765 |
| 2 | 1 மீட்டர் ஜாக்கெட் | 165 | 180 |
| 3 | 1 மீட்டர் பேண்ட் & சர்ட் | 420 | 450 |
| 4 | 1 No டவல் தலைப்பாகை துணி | 345 | 365 |
| 5 | 1 No டர்க்கி டவல் | 695 | 715 |
| 6 | 1 ஜதை காலணி | 435 | 455 |
| 7 | 1 ஜதை ஷீ | 1475 | 1590 |
| | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** | **குறைவு** | **அதிகம்** |

மேற்படியான இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.வெங்கடேசலு ஒப்பந்ததாரர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

<u>அ.கு–</u>

1. அனுமதி அளிக்கலாம்.
2. மன்றப் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1295, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் அனைத்து வார்டுகளிலும் சேகரமாகும் மக்கும் குப்பைகளை கொண்டு நகராட்சி உரகிடங்கில் உரமாக்கும் பணிக்கு தேவையான பொருட்கள் ரூ.5.00 இலட்சத்திற்குள் வாங்கும் பொருட்டு மன்றம் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர்

அவர்களின் முன் அனுமதி பெற்று 20.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பிட்டு படிவம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | கே.வெங்கடேசலு ரூபாய் | E.சந்திரன் ரூபாய் |
| 1 | வெள்ளம் | 75 | 80 |
| 2 | தயிர் | 100 | 110 |
| 3 | உமி | 26 | 30 |
| 4 | தவிடு | 40 | 42 |
| 5 | மரத்தூள் | 150 | 155 |
| | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** | **குறைவு** | **அதிகம்** |

மேற்படியான இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1—ல் கண்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.வெங்கடேசலு ஒப்பந்ததாரர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

<u>அ.கு—</u>

1. அனுமதி அளிக்கலாம்.
2. மன்றப் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1296, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்—4

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் 2021—22—ம் ஆண்டுக்கு தேவையான தளவாட பொருட்கள் ரூ.5.00 இலட்சத்திற்குள் வாங்கும் பொருட்டு மன்றம் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 20.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பிட்டு படிவம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | கே.வெங்கடேசலு ரூபாய் | E.சந்திரன் ரூபாய் |
| 1 | மளார் | 480 | 500 |
| 2 | முள்ளு | 600 | 610 |
| 3 | மண்வெட்டி | 400 | 410 |
| 4 | சிறிய கரண்டி | 350 | 360 |

| | | | |
|---|---|---|---|
| 5 | பெரிய கரண்டி | 500 | 510 |
| 6 | கூடை | 500 | 565 |
| 7 | தென்னை துடப்பம் | 60 | 62 |
| 8 | ஓடு | 200 | 210 |
| 9 | கடப்பாரை | 600 | 610 |
| 10 | பிக்காஸ் | 450 | 460 |
| 11 | கத்தி | 200 | 220 |
| 12 | மண்ணு தள்ளும் பிரேஸ் | 750 | 760 |
| 13 | பிளாஸ்டிக் பாண்டு | 300 | 310 |
| | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** | **குறைவு** | **அதிகம்** |

மேற்படியான இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.வெங்கடேசலு ஒப்பந்ததாரர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

<u>அ.கு–</u>

1. அனுமதி அளிக்கலாம்.
2. மன்றப் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1297, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26729/P3/2017 நாள்.20.12.2017–ன் படி 56 எண்ணிக்கையிலான பணியாளர்களை வெளி கொணர்வின் முறையில் தனியார் ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் ஒப்பந்ததார் மெர்ஸஸ் ரிலையான் பெசிலிட்டி சர்விஸ் (பி) லிமிடெட் அவர்களின் பணி காலம் 31.08.2021 அன்று முடிவடைந்த நிலையில் உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு ஒப்பந்தபுள்ளி கோருவது குறித்து அனுமதி பெற பிரேரனை அனுப்பட்டுள்ளது. இந்நிலையில் பொது மக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதியும் இப்பணியினை ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மெர்ஸஸ் ரிலையான் பெசிலிட்டி சர்விஸ் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு அதே விலைப்புள்ளி மேலும் மூன்று மாத காலங்களுக்கு (01.09.2021 முதல் 30.11.2021) வரை பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.22.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1298, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட காஞ்சிபுரம் சாலை மற்றும் வேணுகோபால் மண்டபம் அருகில் முன்னால் படை வீரர்கள் பூங்கா அருகில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து சாலையில் மட்டத்திற்கு கீழே உள்ளதால் வடிகால் நீர் பூங்கா மற்றும் காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் வழிந்தோடுவதால் பொது மக்கள் போக்குவரத்திற்கும் பொது சுகாதாரத்திற்கு இடையூராக உள்ளதால் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் மன்றப் பொருள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்கண்ட பணியினை 15–வது நிதிக் குழு மாண்ய நிதியில் பணி மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1299, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–7

இந்நகராட்சியில் பயன் படுத்தப்படும் ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கான ஈப்பு வாகனம் எண் (TN 19 J 3325) என்ற வாகனத்திற்கு பேட்டரி Battary பழுதடைந்துள்ளதால் புதியதாக பேட்டரி மாற்றி தர கோரி வாகன ஓட்டுநர் என்பவர் 26.08.2021–ம் தேதியில் கடிதம் அளித்துள்ளார். அதன் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் உள்ளூர் நிறுவனத்தில் மூன்று 3 விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே புதியதாக பேட்டரி வாங்கிட தோராய செலவினம் ரூ.7300/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியத்தை கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1300, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–8

நகராட்சி நிவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம், நகர வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 24.08.2021 அன்று செங்கல்பட்டு நகராட்சி அதனை சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள ஊராட்சிகளை ஒன்றினணத்து எல்லை விரிவாக்கம் செய்யப்படும் என

அறிவிக்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து 26.08.2021 அன்று அரசு கூடுதல் தலைமை செயலர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் செங்கல்பட்டு நகராட்சி எல்லையினை விரிவாக்கம் செய்வதற்கான முன்மொழிவினை அரசின் ஒப்புதலுக்கு தயார் செய்து அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது.

மேலும் முன்மொழிவினை தயார் செய்ய தேவையான செலவினம் மற்றும் எல்லைவிரிவாக்கம் குறித்த பத்திரிக்கை செலவினம் மற்றும் இதர அத்தியாவசிய செலவினங்களுக்கு தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு-

1. அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.8717/2007/எப் 1)

**தீர்மான எண்.1301, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–9**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழ்கண்ட விவரப்படியான வளர்ச்சி பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்ற பார்வைக்கும் பணி செய்ய ஒப்புதலுக்கும்.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை கால முன்னெச்சரிக்கைக்காக வடிநீர்கால்வாய் சுத்தம் செய்தல் பணி | ரூ.5.00 |
| 2 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய GST சாலை குறிஞ்சி நகர் அருகில் சிறுபாலம் மற்றும் வடிகால் அமைத்தல் பணி | ரூ.3.25 |
| 3 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரதான வடிகால்வாய்களில் குப்பைகள் தேங்காவண்ணம் இரும்பு கம்பி வலை அமைத்தல் பணி | ரூ.5.00 |
| 4 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ராமபாளையம் MCC Struding mechine பழுது நீக்கம் செய்தல் மற்றும் தூக்குமரக் குட்டையில் Bailing mechine பழுது நீக்கம் செய்தல் பணி | ரூ.1.30 |
| 5 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு பொது மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை | ரூ.2.00 |

| | | |
|---|---|---|
| | வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | |

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1302, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–10

செங்கல்பட்டு நகராட்சி 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920–ல் பிரிவு 15–ன் கீழ் கீழ்கண்ட பணி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது. மேற்கண்ட குடிநீர் நிதியில் போதிய நிதி ஒதிக்கீடு இல்லாதால் ஏப்ரல் மாத வரப்பெற்ற 2021–22 15–வது மத்திய நிதி குழு மானியத்தில், குடிநீர் பணிகள் செய்திட அறிவுறுத்தியுள்ளதின் அடிப்படையில் பொது மக்களின் அவசரம் அவசியம் தேவைக்கான தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920–ல் பிரிவு–15 ல் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்ட குடிநீர் பணிக்கான பட்டியல் தொகையினை 15–வது மத்திய நிதிகுழு மானியத்தின் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள தரைமட்ட மற்றும் உறிஞ்சு கிணறுக்கு புதிய நீர்முழ்கி மின்மோட்டார்கள் (Spare) 60 HP-1No மற்றும் 12.5 HP 2 Nos வாங்கும் பணி | ரூ.8.85 இலட்சம் | திருவாளர்.K.ராஜகோபாலன் | 0.06% |

ந.க.எண்.0414/2021/இ2

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகையினை 15–வது மத்திய நிதிகுழு மானியத்தின் நிதியிலிருந்து வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1303, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–11

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட, நகராட்சிக்கு சொந்தமான கழிவறைகள், கட்டண கழிப்பிடம் மற்றும் சமூக நலக் கழிவறை ஆகியவை பழுது பார்த்து தர பொது சுகாதார பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்பின் படி குண்டூர் பகுதியில் உள்ள சமூக நல கழிவறை பழுது நீக்கம் செய்யவும் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் சீரமைக்கவும் இந்நகராட்சி பொது சுகாதாரத்தில் ODF+ சான்று கோரி சமர்ப்பித்துள்ளதாகவும் இந்த ஆய்விற்க்குள்ளாக இப்பணி செய்து முடிக்கப்பட்டது. செலவின தொகை ரூ.3,49,565/– இலட்சம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

அ.கு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.348/2021/இ1)

**தீர்மான எண்.1304, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–12

செங்கல்பட்டு நகராட்சிக்குப்பட்ட நகராட்சி புதிய பேரூந்து நிலைய கழிவறை மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருந்துவமனை ஆகியவற்றில் உள்ள கழிவறைகளை பழுதுகளை நீக்கம் செய்து தர இந்நகராட்சி கழிவறைகள் பழுது நீக்கம் செய்யவும் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் சீரமைத்தவும் கொடுக்கப்பட்டது செலவினத் தொகை ரூ.4,27,488/– மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

அ.கு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.348/2020/இ1)

**தீர்மான எண்.1305, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–13

செங்கல்பட்டு நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 முதல் 33 வரை உள்ள தெருக்களில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் தடுப்பு வேலிகள் அமைத்து பொது மக்கள் வெளியே வராமல் தொற்று பரவாமல் இருக்க மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவு பேரிலும், மருத்துவ குழுவின் அறிவுறுத்தல் பேரிலும் பணிகள் செய்ய வேண்டியுள்ளது இதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,99,419/– இலட்சம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. நகராட்சி சட்டம் பிரிவு 15–ல் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

அ.கு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.491/2020/எச்1)

**தீர்மான எண்.1306, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–14

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட சுந்தர விநாயகர் கோவில் தெருவில் கதவு எண்.21/A அருகில் உள்ள பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள சின்டெக்ஸ் குடிநீர் தொட்டியை அப்புறப்படுத்த வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1307, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–15

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட குத்தகை இனங்களான புதிய பேரூந்து நிலையம் உணவகம் மற்றும் கடை எண்.10,17 ஆண்டு குத்தகை இனம் 1. தினசரி காய்கறி நாளங்காடியில் வசூல் செய்யும் உரிமம் 2. தினசரி கூவி விற்போரிடம் வசூல் செய்யும் உரிமம் 3. நவீன ஆடு அறுவை சாலையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 4. புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலம் மற்றும் பொது ஏலம் நடத்தபட்டத்தில். உரிமம் பெறுவதற்கு நபர்கள் எவரும் பங்கு பெறவில்லை. மேலும் ஊரக உள்ளாட்சி தேர்தல் அறிவித்துள்ளபடி 06.10.2021 மற்றும் 09.10.2021 தேதியில் நடைபெறும் தேர்தல் பணிகள் நடைபெற்று முடிவுகள் வரும் வரை தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால். மேற்படி குத்தகை இனங்களுக்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்துவது ஒத்திவைக்கப்படுகிறது. என்று மன்றத்தின் தகவலுக்குக்கு தெரிவிக்கப்படுகிறது.

தினசரி காய்கறி நாளங்காடியின் குத்தகை உரிமம் 30.09.2021 தேதியன்று முடிவடைகிறது. எனவே மற்ற ஆண்டு குத்தகை இனங்களுக்கு துறை வசூல் செய்யப்படுவதை போலவே இவ்வினத்திற்கும். இந்நகராட்சி பணியாளரை கொண்டு துறை மேற்கொள்வதற்கும் முன் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1308, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–16

செங்கல்பட்டு நகராட்சியில் 2021–22 க்கு அலுவலக அத்தியாவசிய பணிகளுக்கு தேவையான எழுதுப் பொருட்கள் (ம) பதிவேடுகள் தற்ப்போது போது மானளவு இருப்பில் இல்லாத காரணத்தால் அவசர அவசியனிருத்தம் பதிவு பெற்ற அரசு நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கவும் இதற்க்கான தோராயன செலவினம் ரூ.10,00,000/– ஒரு இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற ஆணையர் ஒப்புதலுக்கு பணிந்து அனுப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்.

2. அத்தியாவசிய தேவை என்பதால் அவசர அவசியனிமத்தவும் மன்ற ஒப்புதலை எதிர் நோகி தனி அலுவலர் அவர்களின், முன் அனுமதி பெற்று நடவடிக்கை பெற்க் கொண்டர் அங்கீகர்க்கலாம்.

**தீர்மான எண்.1309, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–17

செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் பிரிவில் 2021–22 ஆம் ஆண்டு நிதியாண்டில் பின்வரும் கீழ்கண்ட விவரப்படியான பணிகளுக்கு இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.1050/2021–22/இ2, நாள்.11.08.2021–ன் படி 27.08.2021 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளதை நகர மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்க்கு) |
|---|---|---|---|---|
| 1 | மாமண்டுர் தலைமை நிரேற்று நிலையத்தில் தனியார் மூலம் பணியாட்கள் நியமித்து மோட்டார் (2021–22 ஓர் ஆண்டு) இயங்கும் பணிகள். | ரூ.17,50,000/– | K.ராஜகோபாலன் | 0.09% குறைவு |
| | | | M/S அப்போலோ எண்டார்பிரைசர்ஸ் | 0.34% அதிகம் |
| 2 | பழவேலி மற்றும் மாமண்டுர் தலைமை நிரேற்று நிலையத்தில் 2021–22 ஆம் | ரூ.7,25,000/– | K.ராஜகோபாலன் | 0.17% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டிற்கு Gas Colorination cylinder supply செய்து பொருத்தும் பணி. | | M/S அப்போலோ எண்டர்பிரைசர்ஸ் | 0.17% அதிகம் |

மேற்காணும் 2 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1310, நாள்30.09.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்
செங்கல்பட்டு நகராட்சி